மாலை முரசு

பக்கங்கள் 22+ 03


## காணாமல்போன இளைஞர் ஒருவர் 11 நாள்களின் பின் சடலமாக மீட்பு!

காணாமல்போன இளைஞர் ஒருவர், 11 நாள்களின் பின்னர் சிதைவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்

02


முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை 31.10.2025 | அதிர்வு 93



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழ். பல்கலைக்கழகத்தில் துப்பாக்கி, மகஸின்கள் மீட்பு!

## சோதனை நடவடிக்கை தீவிரம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நூலகத்தின் மேற் கூரைப் பகுதியில் ரி - 56 ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அங்கு மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத் தில் பொலிஸாரால்

02





# முன்னாள் பிரதி அமைச்சரான ஹுசைன் பைலா இன்று கைது!

இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான ஹுசைன் அகமது பைலா, 2015 ஆம் ஆண்டில் அரசுக்கு 9 கோடி 96 இலட்சத்து 79 ஆயிரத்து 799 ரூபாவை இழப்பை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்து இலஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணையத்தின்படி, அவர் தனது பதவிக் காலத்தில் எந்தத் தேவையும் இல்லாமல் 50 தற்காலிக சேமிப்புக் களஞ்சியக் கட்டமைப்புகளை



இறக்குமதி செய்தார் எனவும், இதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது எனவும், வெளித் தரப்பினருக்கு அந்தத் தொகைக்கு சமமான இலாபம் ஏற்பட்டது எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஹுசைன் அகமது பைலா விசாரணைகளின் பின்னர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

2015 பெப்ரவரி முதல் ஒக்டோபர் வரை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பணியாற்றிய பைலா, 2004 முதல் 2010 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். தனது பதவிக் காலத்தில், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் தேசிய நிறுவன மேம்பாடு (2004-2005), திட்ட அமலாக்கம் (2005 - 2007) மற்றும் வெளியுறவு (2007-2010) உள்ளிட்ட பல பிரதி அமைச்சர் பதவிகளை அவர் வகித்தார்.

# மஹிந்தஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சி பிணையில் விடுவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சியைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நெவில் வன்னியாராச்சி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நெவில் வன்னியாராச்



சியை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம்16 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நெவில் வன்னியாராச்சி சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இம்மாதம் 2 ஆம் திகதி முன்னிலையாகிய போது கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தூக்கில் தொங்கிய நிலையில் யுவதியின் சடலம் மீட்பு!

வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட யுவதியின் சடலம் இன்று வெள்ளிக்கிழமை (31) காலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவர் அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த அழகேஸ்வரன் அஜந்திகா (வயது-27) என்ற யுவதியாவார்.

வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடி பொலிஸார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நூலக வளாகத்தின் மேற்கூரைப் பகுதியில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதன்போது நேற்று வியாழக்கிழமை இரண்டு மகஸின்களும் வயர்களும் அடையாளம் காணப்பட்டன.

இதனையடுத்து யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் கோப்பாய் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அந்த மகஸின்களும், வயர்களும் இன்று காலை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்நிலையில், இன்று மீண்டும் மேற்கூரைப் பகுதியில் திருத்த வேலை இடம்பெற்ற நிலையில் அதன் அருகில் ரி - 56 ரக துப்பாக்கி, இரத்தக்கறை படிந்த சாரம், வயர்கள், மருந்துகள், பஞ்சுகள், மருந்து கட்டப் பயன்படுத்தப்படும் பன்டேஜ் துணிகள் என்பவை அடையாளம் காணப்பட்டன.

இதனையடுத்து மீண்டும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆகியோருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து முழுமையாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

அம்பாந்தோட்டை, பெலியத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகுலுகமுவ, தெத்துவாவெல பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்பில் நேற்று வியாழக்கிழமை பெலியத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இரவு வீட்டில் இருந்து வெளியே சென்ற மேற்படி இளைஞர், வீடு திரும்பவில்லை என்று பெலியத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் சிதைவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தென்னந்தோப்பு உரிமையாளர் சடலத்தைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் மோட்டார் சைக்கிள் நாகுலுகமுவ ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெலியத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ராஜபக்ஷ குடும்பத்தினர்தான் ஹிட்லர் போல் செயற்பட்டனர்

## மொட்டுக் கட்சிக்கு அநுர அரசு பதிலடி



"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்க அரசமைப்பின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றார். இதனால்தான் அரசமைப்பு மீறல் தொடர்பில் அவருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு கூட இல்லை. அவர் சர்வாதிகாரி ஹிட்லர் போல் செயற்படவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தினர்தான் ஹிட்லர் போல செயற்பட்டனர்."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஹிட்லர் போல் செயற்படுகின்றார் எனவும், ஹிட்லரைத் தோற்கடிப்பதற்காக அன்று ரஷ்யாவும், அமெரிக்காவும் ஒன்றிணைந்தது போல் எதிரணிகள் ஒன்றுபட வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"மஹிந்த ராஜபக்ஷவும், அவரது குடும்பத்தாரும்தான் ஹிட்லர் போல் செயற்பட்டனர். ஜனநாயகத்துக்குச் சமாதி கட்டி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கு 18 ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. இதனைச் சாகர காரியவசம் மறந்து விட்டார் போலும்.

எமது ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுகின்றார். நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். இந்தக் கோட்பாட்டை நாம் மீறப் போவதில்லை." – என்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல மேலும் கூறினார்.



# போதைப்பொருள் வியாபாரிகள், பாதாளக் குழுவினர் தேசிய அரசியலுக்குள் நுழைவதற்குக் கடும் முனைப்பு

## பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய எச்சரிக்கை

போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலகக் குழுவினர் தேசிய அரசியலுக்குள் நுழைவதற்கு எத்தனிக்கின்றனர் என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"போதைப்பொருள் வியாபாரம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் என்பவற்றுடன் தொடர்புடைய நபர்கள் அரசியலுக்கு வந்துள்ளனர். எதிர் காலத்தில் அவர்கள் தேசிய அரசியலுக்




குள் வருவதற்கும் திட்டமிட்டுள்ளனர். இப்படியானவர்களுக்கு இடமளிப்பது தொடர்பில் கட்சிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். எனவே, குற்ற வாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பை வழங்காதிருப்பதற்குக் கட்சிகளுக்கும் பெரும் பொறுப்புள்ளது.

போதைப்பொருள் வியாபாரிகள், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாளக் குழுவினர் கட்சி அரசியலுக்கு வந்த பின்னர், வெள்ளை ஆடைகளை அணிந்துகொண்டு கறுப்பு வேலைகளைச் செய்கின்றனர். எனினும் எவற்றையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்." - என்றார்.

# குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது!

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் அயினியாப்பிள்ளை முபாரக் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இன்று (31) காலை 11.30 மணியளவில் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 5 லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடம்போடை என்ற கிராமத்தில் உள்ள அரச காணி ஒன்றுக்கான அளிப்



புப் பத்திரம் பெற்றுத் தருவதாக கூறி இந்தப் பகுதியை சேர்ந்த ஒருவரிடம் இருந்து பிரதேச சபைத் தலைவர் இன்று (31) காலை குச்சவெளி பிரதேச சபையில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து லஞ்சப் பணத்தை பெற்றுள்ளார்.அதனை அடுத்துக் குறித்த காணிக்கு பணம் செலுத்தியவருடன் இவர் சென்ற போது அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டார்.

தற்போது நிலாவெளி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள இவர் அங்கு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.



# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு தமிழ் பேசக்கூடிய பொறுப்பதிகாரி நியமனம்

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குத் தமிழ்மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து கிளிநொச்சி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழர் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொறுப்பதி காரிகளை அரசு நியமித்து வருகின்றது. இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக எம்.சுல்தான் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இரத்தினபுரியில் துப்பாக்கிச்சூடு!

## இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

இரத்தினபுரி, கலவான பகுதியில் இருவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறின் காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று விசாரணைகளில்தெரியவந்துள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த இருவர் சிகிச்சைகளுக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைய ஐ.தே.க. தயாரில்லை

## இப்படிச் சொல்கின்றார் அஜித் மானப்பெரும

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தின் கீழ் தனிக்கட்சியாக ஒன்றிணைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாகும். இந்த நடவடிக்கையானது தனியொரு கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்கல் அல்ல.

அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நோக்கிலேயே ஹரின் பெர்னாண்டோவுக்குப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது." – என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு இரு தரப்புகளும் இணைந்து மாகாண சபைத் தேர்தலை பொதுப் பட்டியலின் கீழ் எதிர்கொள்வதற்குரிய ஏற்பாடும் இடம்பெற்று வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ள



நிலையிலேயே ஐ.தே.க. உறுப்பினரான அஜித் மானப்பெரும மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# சத்திர சிகிச்சைக்காக வீட்டை விற்ற டிலான்!



"நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். எனக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அதிக செலவு ஏற்பட்டது. அதனை ஈடுசெய்வதற்கு என்னிடம் பணம் இருக்கவில்லை. எனவே, பதுளையில் நான் 63 வருடங்களாக வாழ்ந்த வீட்டை விற்பனை செய்துவிட்டேன்."

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எனது தந்தை வழி உரிமையாகவே எனக்கு இந்த வீடு கிடைத்தது.

வீட்டை விற்ற பணத்தில் மருத்துவச் செலவைச் செலுத்திவிட்டேன். எஞ்சிய பணத்தில் சிறிய வீடொன்றைக் கட்டிக்கொண்டு எஞ்சிய காலத்தைக் கடந்த வேண்டியதுதான். பதுளையில் இருந்தே அரசியலிலும் ஈடுபடுவேன். ஜனாதிபதி நிதியத்திடம் பணம் கேட்பதற்கு நான் முற்படவில்லை." – என்றார்.

## நல்லூர் பிரதேச சபைப் பகுதிகளில்

# கழிவுகளை வீசுவோர் மீது பாய்கின்றது நடவடிக்கை!

## 11 இடங்களில் தொடர் கண்காணிப்பு என்கிறார் தவிசாளர்

யாழ். நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது பாரபட்சம் இன்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாகக் கழிவுகள் கொட்டப்பட்டு வந்த 11 இடங்கள் கண்காணிப்புக் கமராக்களால் அவதானிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

"நல்லூர் பிரதேச சபையின் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அண்மைக்காலமாக மிகவும் வினைத்திறனான வகையில் மேற்கொண்டு




வருகின்றோம். இதன்படி, நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்கும் வகையில் 11 இடங்களை அடையாளப்படுத்தி அங்கு கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தியுள்ளோம். அங்கு தொடர்ச்சியாகக் கழிவுகளை வீசுபவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு, கிராம அலுவலர்கள் ஊடாக அவர்களின் தகவல்கள் பெறப்பட்டு அபராதம் விதிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் பலர் அடையாளப்படுத்தப்பட்டு கடந்த இரண்டு மாத காலத்தினுள் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கென ஒரு தனி அலகும் நல்லூர் பிரதேச சபையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது மேலும் சில இடங்களில் குப்பைகள் கொட்டப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேலும் கடினமாயிருக்கும். ஆதலால், தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் செயற்பட வேண்டும்."

– என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பழைய பல்லவி

2026ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீத எதிர்வுகூறலை 3.5 சதவீதத்தில் இருந்து 3.1 சதவீதமாகக் குறைத்திருக்கும் சர்வதேச நாணய நிதியம், இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடரவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறலில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்தக் குறைப்பானது இலங்கை தளர்வான நிலையில் இருப்பதைப் பிரதிபலிக்கவில்லை எனவும், மாறாக ஓர் அசாத்தியமான மீட்சியைத் தொடர்ந்து பொருளாதாரம் இயல்புநிலைக்குத் திரும்பியிருப்பதையே பிரதிபலிக்கின்றது எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் தோமஸ் ஹெல்பிளிங் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் இலங்கையின் பின்னடைவைச் சமாளிக்கும் கருத்தாக இந்த விளக்கம் அமைந்தாலும், இலங்கை பொருளாதார ரீதியில் மிக நெருக்கடியான நிலையை நோக்கி மீண்டும் நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

2022 - 2023 வரையான காலப்பகுதியில் கடன்களை மீளச்செலுத்துவதில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக இலங்கை பொருளாதார மந்த நிலைக்கு முகங்கொடுத்ததாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களின் மூலம் மீண்டும் மீட்சியடைந்த பொருளாதாரம் கடந்த ஆண்டு 5 சதவீத வளர்ச்சியையும், இவ்வருடத்தில் முதல் அரையாண்டில் 4.8 சதவீத வளர்ச்சியையும் பதிவுசெய்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசின் காலத்தைத் தொடர்ந்து ஓரளவு மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிப் போக்கு இப்போது மீண்டும் தளர்வடையத் தொடங்கிவிட்டது என்பதையே பொருளாதார வளர்ச்சி வீத எதிர்வு கூறலை குறைத்துக் கூறும் நிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

வருடாந்தம் குறைந்த பட்சம் 5 சதவீதத்திற்கு மேலான வளர்ச்சி வீதத்தை நாடு வெளிக்காட்டினால் மாத்திரமே வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய சர்வதேச கடன்களையும் உள்நாட்டுக் கடன்களையும் அதற்குரிய 2028 ஆம் ஆண்டு முதல் மீளச் செலுத்தக்கூடிய நிலைமை இலங்கைக்குச் சாத்தியமாகும் என்று பொருளாதார நிபுணர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஓரளவு மேம்பாடு காட்டிய இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் மீண்டும் 3.1 என்ற வீழ்ச்சி நிலையை நோக்கி நகருமானால், 2028 முதல் மீளவும் கடன்களுக்கான தவணைப் பணத்தைச் செலுத்துவது சாத்தியமற்றுப் போகும் என்று இப்போதே பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் மேம்பட்டால்தான் நாடு ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர வாய்ப்புக் கிட்டும். ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை, வெளிநாட்டிலிருந்து இலங்கையர் உழைத்து அந்தந்த நாட்டு நாணயத்தில் நாட்டுக்கு அனுப்பும் பணம் ஆகியவற்றின் மூலம் மட்டுமே அந்நிய செலாவணியை நாடு உழைத்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியும்.

பொருளாதார வளர்ச்சி வீதம் தொடர்பான எதிர்வு கூறல் வீழ்ச்சி அடைந்திருப்பது, 2028 இல் நாடு மீண்டும் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது என்பதைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.



# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரத்தின் மூலம் மீளவும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்காதீர்!

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் ரவிகரன் காட்டம்

**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வெடிவச்சகல்லு, திரிவைச்சகுளம் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களை ஆக்கிரமித்து, சட்டவிரோதமாக "அந்தரவெவ" கமக்கார அமைப்பையும் பதிவுசெய்துவிட்டு, உயிர் அச்சுறுத்தலை விடுப்பதன் ஊடாக மீண்டும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கக்கூடாதென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே அங்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் திரிவச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரம் தொடர்பாக பேசப்பட்ட விடயங்கள் வருமாறு:-

திரிவைச்சகுளத்தின் கீழான தமது பூர்வீக வயல்நிலங்களைத் துப்பரவு செய்த தமிழ் மக்களை கடந்த 2020.09.08ஆம் திகதியன்று வனவளத் திணைக்களம் கைது செய்து நீதிமன்றில் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது. வனவளத் திணைக்களத்திற்குரிய பகுதியைத் துப்பரவுசெய்தார்களென்ற குற்றச்சாட்டை முன்வைத்தே தமிழ் மக்களுக்கெதிராக இவ்வாறு வனவளத்திணைக்களத்தால் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டதாக ரவிகரன் எம்.பி. தெரிவித்தார்.

அந்தப்பகுதி வனவளத்திணைக்களத்திற்குரிய ஒதுக்கக் காட்டுப் பகுதியென்பதற்கு ஆதாரமாக நீதிமன்றில் வனவளத்திணைக்களம் எவ்வித சான்றுகளையும் கையளிக்காதநிலையில், வனவளத் திணைக்களத்தால் குற்றஞ்சுமத்தப்பட்ட தமிழ் மக்களை இந்த வழக்கிலிருந்து விடுவிப்பதாக கடந்த 2023.10.24அன்று நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தப் பகுதிக்குரிய பெயர் திரிவைச்சகுளமெனவும், அங்கு தமிழ் மக்கள் திரிவச்சகுளம் கமக்கார அமைப்பாக பூர்வீகமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர் எனவும், கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாகவே தமிழ்மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தனர் ரவிகரன் தெரிவித்தார்.

வனவளத்திணைக்களம் வவுனியா நீதிமன்றில் தமிழ் மக்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தபோது அது தமது பூர்வீக நிலமென்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாக நீதிமன்றிற்கும் கூறியிருந்தமையையும் அவர் சுட்டிக்காட்டினார். வழக்கின் பிரதி ஒன்றை சபைக்கு காண்பித்துபேசிய அவர் "எனது அப்பாவின் காணியை நான் துப்பரவு செய்து கொண்டிருக்க வனவளத்திணைக்களம் என்னைக் கைது செய்தது" எனக் கைதான தமிழ் மக்களில் ஒருவர் நீதிமன்றிற்கு தனது வாக்குமூலத்திணை வழங்கியிருக்கின்றார் என்று தெரிவித்தார்.

இவ்வாறு நீதிமன்றில் தமிழ் மக்களுக்கு எதிராக வனவளத் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கு இடம் பெற்றுக்கொண்டிருக்கும்போது, அந்தப் பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆக்கிரமித்து, கடந்த 2022ஆம் ஆண்டு பெரும்பான்மை இனத்தவர்கள் 10 பேருக்கு, 40ஏக்கர் திரிவைச்சகுளம் வயல்காணிகளை ஒருபோகத்திற்கு மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருப்பதாக ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து தமிழ் மக்களின் அந்த பூர்வீக திரிவைச்சகுளம் பகுதி "அந்தரவெவ" கமக்கார்அமைப்பாக சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு மகாவலி அதிகாரசபையின் ஆளுகையிலுள்ள சட்டவிரோத "அந்தரவெவ" கமக்கார அமைப்பிற்கு உரமானியம் வழங்குவதற்காக வவுனியா வடக்கு பிரதே. செயலாளர் பிரிவிலுள்ள கிராம அலுவலர் ஒருவர் அனுமதி வழங்கிக் கையெழுத்திட்டிருந்தமையுடன், அப்போது வவுனியா வடக்கில் பிரதேசசெயலாளர் இருந்தபோதும், மேலதிக பிரதேசசெயலாளராக இருந்த தற்போதைய பிரதேசசெயலாளர் அனுமதி வழங்கிக் கையெழுத்திட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

மகாவலி அதிகாரசபையின் கட்டுப்பாட்டிலுள்ள சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்ட அந்தரவெவ கமக்கார அனைப்புக்கு அவர்கள் எவ்வாறு உரமானியம் வழங்குவதற்கு அனுமதி வழங்கமுடியுமெனவும் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

திருட்டுத்தனமாக எமது மக்களின் காணிகளை அபகரிக்கின்ற ஒரு திருட்டுச்சபையே – மகாவலி அதிகாரசபை என மகாவலி அதிகாரசபையை அவர் மிகக் கடுமையாகச் சாடினார்.

இத்தகைய மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் துணையுடன் தற்போது திரிவைச்சகுளம் பகுதியை அண்டியுள்ள இடங்களில் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் பாரிய அடர்வனங்களை அழித்து ஆக்கிரமிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்மக்கள் ஒரு "மண்வெட்டிப்பிடி" வெட்டியதற்காக நான்கு வருடங்கள் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்ற சம்பவங்கள்கூட இடம்பெற்றிருப்பதாக தெரிவித்த ரவிகரன், பெரும்பான்மை இனத்தவர்கள் பாரிய அளவில் அடர்வனங்களை அழித்து ஆக்கிரமிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றபோது உரிய தரப்பினர் வேடிக்கை பார்க்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு சட்டவிரோதமாக அடர்வனங்களை அழித்தவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அபிவிருத்திக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்கவிடம் ரவிகரனால் இதன்போது கோரிக்கை

தொடர்ச்சி▼



# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரத்தின் மூலம் மீளவும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்காதீர்!

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் ரவிகரன் காட்டம்

தொடர்ச்சி▲

முன்வைக்கப்பட்டது.

அத்தோடு அங்கு வெட்டப்பட்ட பாரியளவான வீரை, பாலை மரங்கள் எங்கு கொண்டுசென்று விற்பனைசெய்யப்பட்டதென்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், வெட்டப்பட்ட மரங்களுக்குரிய தண்டப்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

திரிவைச்சகுளத்தை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமாக அடர்வனங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக தாம் செயற்பட, தமக்கெதிராக சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடும் பெரும்பான்மை இனத்தவர்கள் உயிர் அச்சுறுத்தல் விடுக்கும்விதமாக கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர் என்றார் அவர்.

அவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துக்கள் தெவிக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன எனவும் அவர் சொன்னார்.

மேலும் ஜனநாயக அரசியலை முன்னெடுத்துள்ள தம்மை வேறு திசை நோக்கி நகர்த்தவேண்டாமெனத் தெரிவித்த ரவிகரன், திரிவைச்சகுளம் பிணக்கின்மூலம் அடுத்த கட்ட இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்கவேண்டாமெனவும் கேட்டுக் கொண்டார்.

திரிவைச்சகுளம் என்னும் பகுதி மகாவலி அதிகாரசபைக்கு உட்பட்ட ஒரு பகுதியெனத் தெரிவித்த வவுனியாவடக்கு பிரதேச செயலாளர், பிரதேசசெயலக ஆளுகைக்குட்பட்ட விடயங்களுக்கே தம்மால் அனுமதி வழங்கமுடியுமெனவுந் தெரிவித்தார். மகாவலி அதிகாரசபைப் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள கமக்காரஅமைப்பிற்கு தம்மால் அனுமதியை வழங்கமுடியாது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு "அந்தரவெவ; கமக்கார அமைப்பிற்கு தம்மால் உரமானியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் விடயத்தில் தமக்கு பல சந்தேகங்கள் இருக்கின்றன எனவும், எனவே அதுதொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

குறிப்பாக உரமானியத்திற்குரிய அனுமதியென்பது உரிய பகுதிகளுக்குரிய கிராம அலுவலர் ஆராய்ந்து உறுதிப்படுத்தி கையெழுத்திட்ட பின்னரே, கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலை அடிப்படையாக வைத்தே தம்மாலும் அனுமதிவழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இது தவிர குறித்த உரமானியத்திற்கு அனுமதியைப் பெற்றவர்கள், பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேறு ஓர் இடத்திற்கு அனுமதியைப் பெற்றுவிட்டு மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட அந்தப் பகுதிக்கு எம்மால் உரமானியத்திற்கான அனுமதி வழங்கப்பட்டதாக காண்பித்துக் கொள்ளக்கூடிய நிலைமையிருப்பதாகவும் பிரதேசசெயலாளர் தெரிவித்தார்.

அத்தோடு கிராம அலுவலரும் முழுமையாக ஆராயாமல், மகாவலியின் ஆளுகையிலுள்ள பகுதிக்கு உறுதிப்படுத்தி அனுமதியை வழங்கியிருக்கவும் சந்தர்ப்பமிருப்பதாகவும், இந்த அடிப்படையிலேயே தம்மாலும் அந்தரவெவ என்ற கமக்கார அமைப்பிற்கு உரமானியம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கலாமெனவும் மழுப்புகின்ற விதத்தில் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது இடையிட்டு கருத்துத் தெரிவித்த ரவிகரன், சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்ட ஒரு கமக்கார அமைப்பிற்கு உரமானியத்திற்கு பிரதேசசெயலாளர் கையெழுத்திட்டுவிட்டு இவ்வாறு பொறுப்பற்று கருத்துத் தெரிவிக்க முடியாதென மிகவும் கடுமையாகக் கூறினார்.

மகாவலியின் ஆளுகையிலுள்ள அந்த கமக்கார அமைப்பிற்கு உரமானியம்வழங்குவதைநிறுத்துவதுடன், குறித்த சட்டவிரோத கமக்கார அமைப்பை நீக்குமாறும் தெரிவித்தார்.

இந்நிலையில் அதுதொடர்பான சர்சைக்குரிய ஆவணங்கள் இருப்பின் சமர்பித்தால் தம்மால் உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமென பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

அந்தவகையில் சமூகசெயற்பாட்டாளர் தவபாலன் இதன்போது மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்ட அந்தரவெவ கமக்கார அமைப்பிற்கு வவுனிய வடக்கு கிராம அலுவலர் மற்றும் பிரதே. செயலாளர் உரமானியத்திற்கு அனுமதி வழங்கிய ஆவணங்களை இதன்போது பிரதேச செயலாளரிடம் கையளித்தார்.

இந்தவிவகாரம் தொடர்பாக போலியான பிரசாரங்கள் தமக்கெதிராக தென்னிலங்கைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன என அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் உபாலி சமரசிங்கவினால் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக சிங்கள மக்களுக்குரிய இடங்களை தமிழ் மக்களுக்கு வழங்கத் தாம் நடவடிக்கைகளை மேற்கொள்கின் றார் எனத் தென்னிலங்கைப் பகுதிகளில் சமூகவலைத் தளங்களினூடாக போலியான பரப்புரைகள் தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்

தென்னிலங்கையிலிருக்கின்ற இனவாதத்தையுடைய பௌத்த துறவிகள் வெலிஓயா பகுதிக்கு வருகைதந்து தேவையற்ற போலியான இனவாதப் பரப்புரைகளை தமக்கெதிராக மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலே ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கையில் தாம் ஈடுபட்டார் எனவும் உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்.

அதன்படி பிணக்குக்குரிய பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுடனும், மகாவலி அதிகார

தொடர்ச்சி▼



# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரத்தின் மூலம் மீளவும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்காதீர்!

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் ரவிகரன் காட்டம்

தொடர்ச்சி▲

சபையுடனும் தாம் இரு தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டார் எனவும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்.

அதன்படி, பிணக்கிற்குரிய பகுதியில் 40ஏக்கர் காணிகளை, மகாவலி அதிகாரசபை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஒருபோகத்திற்கு விவசாயம் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியுள்ளமை தம்மால் இதன்போது கண்டறியப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு இவ்வாறு விவசாய நடவடிக்கைக்கென ஒருபோகத்திற்கு மாத்திரம் 40ஏக்கர் காணிகள் ஒப்பந்த அடிப்படையில் மகாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தபோதும், பெரும்பான்மை இனத்தவர்கள் அந்த ஒப்பந்த நடமுறைகளை மீறி தொடர்ந்தும் அங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், கடந்தகால அரசியல் செல்வாக்குக்களை பயன்படுத்தி பெரும்பான்மை இனத்தவர்களால் மேலதிகமாக 150 ஏக்கர் வரையில் காணிகள் அத்துமீறி அபகரித்துள்ள விடயத்தினையும் தாம் அறிந்துகொண்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்களை அறிந்துகொண்டபிற்பாடு ஏற்கனவே மகாவலி அதிகார சபையால் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஒரு போகத்திற்கான ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட 40ஏக்கர் காணிகளில் மாத்திரம் இன்னும் ஒருபோகத்திற்கு மாத்திரம் பயிர்செய்கை மேற்கொள்ளமுடியும். அதன்பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென ஒரு தீர்மானமும் அக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்டதாகவும் உபாலி இதன்போது தெரிவித்தார்.

இருப்பினும் தற்போதும் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மாறாக பெரும்பான்மை இனத்தவர்கள் 40 ஏக்கருக்கும் மேலதிகமாக தற்போதும் பயிற்செய்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தமக்கு தகவல் கிடைத்ததாகவும், அந்தவகையில் மேலதிகமாக பயிற்செய்கை மேற்கொண்டவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியவர்களிடம் அறிவுறுத்தியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் மகாவலி அதிகாரசபையினால் அடுத்த ஆண்டில் கிவுல் ஓயாத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை தொடர்பிலும் இதன்போது உபாலி சமரசிங்கவினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக வெலிஓயாப் பகுதிக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளும் வகையில் குறித்த பிணக்குக்குரிய பகுதி உள்ளடங்கலான பெரும்பகுதிகளை உள்ளடக்கி கிவுல் ஓயா என்னும் பெயரிலான பாரிய நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

கிவுல் ஓயாத்திட்டத்தினை அமுல்படுத்தினால் இந்த பிணக்குக்குரிய பகுதி உள்ளிட்ட பெரும் பகுதிகள் நீர்த்தேக்கத்தின் நீரேந்து பிரதேசமாகமாறும் எனவும் தெரிவித்தார்.

தமிழர்களின் பூர்வீக மணலாற்றை வெலிஓயாக மாற்றிவிட்டு அங்கு அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் 6000ஏக்கர் நீர்ப்பாசன விவசாயக் காணிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அறியமுடிகின்றது.

கிவுல்ஓயா திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியாவடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல் நிலங்கள், தமிழர்களின் பூர்வீகக் கிராமங்கள் பலவும் நீரில்மூழ்கும் அபாயம் ஏற்படுமென ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில் தமிழர்களின் பூர்வீக விவசாயக் குளங்களான இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ்வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம், வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டைக் கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் அந்தக் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் நீரேந்து பகுதிகளாக மாறும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறாக தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் மற்றும் குளங்கள், பழந்தமிழ் கிராமங்கள் என்பவை விழுங்கப்பட்டே இந்த கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் வெலிஓயாவில் குடியேற்றப்பட்ட சிங்களமக்களுக்காக முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி சர்வதேசத்தை நாடவுள்ளது எதிர்க்கட்சி!

## மரிக்கார் எம்.பி. தகவல்

அரசியல் தலைவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி, சர்வதேசத்தை நாடுவதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:–

“ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளன. அரச அலுவலகங் களுக்குள் புகுந்து மக்கள் பிரதிநிதிகள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு அச்சமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அரசியல் தலைவர்களின் பாதுகாப்பே அச்சுறுத்தலில் உள்ளது என்றால், பொதுமக் களின் பாதுகாப்புத் தொடர்பில் நாங்கள் அச்சமடைகின்றோம்.

ஆயுதக் குழுக்களையும், போதைப் பொருள் குழுக்களையும் ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அரசு கூறுகின்றது. ஒரு கட்சியாக அரசின் இந்தத் திட்டங்களை ஆதரிக்கின்றோம். அதேநேரம், ஆயுதக் குழுக்கள் என்ற



போர்வையில் அரசியல் தலைவர்களை இலக்கு வைப்பதைத் தீர்க்கமாக எதிர்க்கின்றோம்.

நாட்டின் பாதுகாப்பை அரசு விரைவில் உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையிலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் இது தொடர்பில் முறையி டுவோம்.” – என்றார்.

# முனையிலுள்ள சிறுவர் மகிழ்வகத்தை சிறுவர் பூங்காவாக அறிவிக்கத் தீர்மானம்



முனைப் பகுதியில் புதிதாக அமைக் கப்பட்ட சிறுவர் மகிழ்வகத்தில் சிறுவர்கள் வீதிக்கு செல்லாது பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது என்றும், அதை சிறுவர் களுக்கு உரிய பூங்கா என அறிவிப்பது என்றும் நகர சபை கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் வின்சன் டீபோல் டக்ளஸ்போல் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (30) முற்பகல் 9:15 மணியளவில் ஆரம்பமானது.

கடந்த கூட்ட அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதை தொடர்ந்து அமைக் கப்பட்ட வீதிகளின் ஓரங்களை செப்பனிடுதல், வீதி விளக்குகளை விரைவாக பொருத்துதல், நகர சபை எல்லைக்குட் பட்ட பகுதிகளில் அறநெறி பாடசாலைகள் உருவாக்குவதை ஊக்கிவித்தல், இலங்கை போக்கு வரத்து சபைக்கு நவீன சந்தை தொகுதி அமைந்துள்ள பகுதியில் அலுவலகம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தல், வாடகை ஓட் டோகளை ஒழுங்குபடுத்துதல், வரி அறவிடுதல், நவீன சந்தைப் பகுதியில் தனியார், அரச பஸ்களை தரிப்பிடம் போன்றவற்றைப் பருத்தித்துறை பொலிஸார் கண்காணித்தல், சபை தீர்மானங் களை ஒழுங்கமைத்தல், நவீன சந்தை பகுதியின் மேல் பகுதி மழை நீர் ஒழுக்கு ஏற்படுவதாகவும் அதனை நிரந்தர தீர்வாக எட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஊழியர்களுக்கான 40 வீதமான கொடுப்பனவு அதிகரிப்பை வழங்கவேண்டும் என்று வழங்கப்பட்ட சுற்றுநிருபம் தொடர்பாக ஆராயப்பட்டது. அதனை வழங்குவதற்கு நிதி சபையிடம் இல்லை என்றும் இதனால் மத்திய அரசின் சுற்று நிருபத்தை மன்றினூடாக ரிட் சவாலுக்கு உட்படுத்துவது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பருத்தித்துறை மரக்கறி சந்தையைப் பழைய இடமான நவீன சந்தைத் தொகுதிக்கு மாற்றுமாறு கோரி அண்மையில் இடம் பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் வர்த்தகர்களால் வழங்கப் பட்ட மகஜர் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக நீதிமன்றத்தின், சமர்பணங்கள், கட்டளை தொடர்பாக நகரசபை உறுப்பினர் தி.சந்திர சேகர் வாசித்து தனது வாதங்களை முன்வைத்தார். அதற்கு எதிராக கருத் துக்களை முன்வைத்து ஜெயகோபி தனது கருத்தில் அங்கு ஒருவழிபாதை, சிறிய வீதி, நீர் தேங்கிமிடம் போன்றவை நிவர்த்தி செய்ய முடியாத குறைபாடுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் சபையால் பழைய இடத்துக்கு மாற்றுவதென தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு சபையால் நவீன சந்தை பகுதியில் கீழ் தளத்தில் அமைப்பது தொடர்பாக ஆய்வுக்காக நிபுணர்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் முடிவு வரும்வரை ஏற்கனவே ஏடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவது என்றும், நகரசபையின் கழிவகற்றல் தொடர்பாக ஆராயப்பட்டு உரிய தரப்புக்களை அணுகி கழிவகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் தெரிவிக்கப்பட்டது.





# வடக்கு மாணவர்களுக்குக் கண் பரிசோதனை ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணம்!

## ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் கண்பரிசோதனைகளை நடத்தி தேவையான மாணவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகளை வழங்கி இலங்கையில் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமான செயற்பாட்டை வடக்கு மாகாணம் மேற்கொண்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக முன்பள்ளி மற்றும் அடுத்த ஆண்டு தரம் 1 இல் இணையும் மாணவர்களுக்கான கண் பரிசோதனை நடவடிக்கைகளையும் பல தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான, 'நகுலேஸ்வரி வாசுதேவன் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி விநியோகத் திட்டம்' வடக்கு மாகாண சுகாதார மற்றும் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் கண் மருத்துவ நிபுணர் எம்.மலரவன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கான நிதி அனுசரணையை அலாகா அறக்கட்டளை (மலேசியா) மூலம், அசிஸ்ட் ஆர்ஆர் (இங்கிலாந்து மற்றும் இலங்கை) ஊடாக வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் கண்பரிசோதனை முன்னெடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 1,150 ஆசிரியர்கள் பயிற்றப்பட்டனர்.

அவர்கள் ஊடாகக் கண்டறியப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவ நிபுணர் எம்.மலரவன் தலைமையிலான குழுவினர் கண் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வடக்கிலுள்ள 9,313 மாணவர்கள் சுமார் 4.49 சதவீதத்தினர் கண்ணாடி தேவையுடையவர்களாக அடையாளப் படுத்தப்பட்டு அவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த ஒட்டுமொத்த செயன்முறை மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய 'தெளிந்த பார்வை, ஒளிமயமான எதிர்காலம்' என்ற நூல் ஆளுநர் செயலகத்தில் வைத்து இன்று வெள்ளிக்கிழமை (31) ஆளுநரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், திட்டமிட்ட காலத்துக்குள் விரைவாக இதனைச் செய்து முடித்த மருத்துவ நிபுணர் மலரவன் தலைமையிலான குழுவினருக்கு நன்றிகளைக் கூறுகின்றேன். இதற்கு நிதியுதவி வழங்கக் காரணமான மருத்துவர் வேலாயுதம் சர்வேஸ்வரனுக்கும் எனது நன்றிகள். இந்தச் செயற்றிட்டம் இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமானது. எமது மாகாணத்துக்கு கிடைத்த வரப்பிரசாதம்.

கண்பார்வை குறைபாட்டுடன் இருந்த எமது மாகாணப் பிள்ளைகளுக்கு இன்று புதிய உலகத்தை காணும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அவர்களது கல்வி மேம்பாட்டுக்கு வழி கிடைத்திருக்கின்றது. பல பிள்ளைகள் குறைபாடுகள் இருந்தாலும் மருத்துவமனைக்குச் செல்வதில்லை. பலருக்கு தங்கள் பிள்ளைகளுக்கு கண்ணில் குறைபாடு உள்ளது என்பதே தெரியாது. இவை எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் வகையில், பிள்ளைகளை தேடிச் சென்று நடத்திய இந்தச் செயற்றிட்டம் முறியடித்திருக்கின்றது.

இந்தத் திட்டத்துக்கு எங்கள் அதிகாரிகள் பலர் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார்கள். ஆரம்பத்தில் சிலர் இந்தத் திட்டம் ஏன் என்று யோசித்தவர்கள் கூட திட்டத்தின் நன்மையறிந்து பின்னர் ஒத்துழைப்பு நல்கியிருக்கின்றார்கள். மருத்துவ நிபுணர் மலரவனால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனத்திலெடுத்து தொடர்ந்தும் திட்டம் நடைமுறையாக ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும்.- என்றார்.

இந்த நிகழ்வில், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிச் செயலாளர்கள், பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி, மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.














# இளமையின் இனிய பாதை; போதைக்கு அல்ல...!

இளமை என்பது வாழ்க்கையின் பொற்காலமாகும். கனவுகளும் இலட்சியங்களும் மலர்கின்ற பருவம். உடல் வலிமையும் அறிவுத் திறனும் தைரியமும் நம்பிக்கையும் நிரம்பிய காலமுமாகும். ஆனால் இன்று அந்த இனிய பருவம் பல இளைஞர்களுக்கு அழிவின் பாதையாக மாறிவருகிறது. போதைப்பொருள், மது பானம், மயக்க மருந்துகள் எனப் பல்வேறு வடிவங்களில் இளமையை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு முறை சோதித்து பார்ப்போம் என்ற ஆர்வம் பின்னர் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் அடிமைத்தனமாக மாறுகிறது.

இலங்கையில் போதைப்பொருள் பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது. கடந்த சில ஆண்டுகளில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டில் பெரும் உயர்வு ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தெரிவிக்கிறது. குறிப்பாக இளைய தலைமுறையினரே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். போதையின் பரவல் பெரும்பாலும் கொழும்பு, யாழ்ப்பாணம், களுத்துறை, நுவரெலியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் குறிப்பிடத்தகுந்த அளவில் காணப்படுகிறது. ஐஸ் எனப்படும் புதிய வகை மயக்கப் பொருள் இலங்கையில் வேகமாக பரவிக் கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது. இதனை இளைஞர்களிடம் விற்பனை செய்வதும் சிலர் இதனை சுறுசுறுப்பூட்டும் மருந்து என தவறாக நம்புவதும் பிரச்சனையை மேலும் தீவிரப்படுத்துகிறது.

போதையால் பாதிக்கப்பட்ட பல இளைஞர்கள் பள்ளியை விட்டு விலகுதல் குற்றச்செயல்களில் ஈடுபடுதல் மனநலப் பிரச்சனைகள் போன்ற விளைவுகளால் தமது வாழ்க்கையை இழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு போன்ற நகரங்களில் போதையிலிருந்து மீளும் மறுவாழ்வு மையங்கள் நிரம்பியுள்ளன என்பது தற்போதைய நிலையின் கடுமையைக் காட்டுகிறது. மேலும் சமூக ஊடகங்கள் வழியாக போதைப்பொருள் விற்பனை ஒரு புதிய வடிவமாக வளர்ந்து வருகிறது. குறியீட்டு வார்த்தைகள் மூலம் போதைப்பொருள் விற்பனைச் சங்கிலிகள் இயங்குகின்றன. இத்தகைய டிஜிட்டல் போதை வலையமைப்புகள் சட்டத்துக்கு எட்டாதபடி செயல்படுவதால் தடுப்பு முயற்சிகள் சிரமமாகியுள்ளன. சட்ட நடவடிக்கைகள் மட்டும் போதுமானதல்ல. சமூகம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படாத வரை போதையின் வேரை அறுப்பது கடினமாகும்.

இன்று இலங்கை சமூகத்தில் கல்வி நிறுவனங்களும் ஊடகங்களும் இணைந்து இளைஞர்களை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுவது காலத்தின் தேவை ஆகும்.



மதுஷாயினி மதிவதனன்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அண்மைக்கால செய்தித்தாள்களைப் புரட்டிப் பார்த்தால் போதைப்பொருள் தொடர்பான செய்திகள் நாள்தோறும் தலைப்புச் செய்தியாக வெளிவருவது இனி ஆச்சரியமில்லை. மாணவர்கள் உட்பட 200 பேர் போதைப் பொருள் வழக்கில் கைது, கடற்பரப்பில் பெரும் அளவு ஹெரோயின் கைப்பற்றப்பட்டது, பள்ளி மாணவர் ஐஸ் போதையில் மயங்கி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் போன்ற தலைப்புகள் இப்போது பொதுவான காட்சியாக மாறியுள்ளன. 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் பல பகுதிகளில் குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மற்றும் களுத்துறை போதைப்பொருள் தொடர்பான கைது எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக காவல்துறை தெரிவிக்கிறது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மட்டும் 10,000 க்கும் மேற்பட்ட போதை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் பெரும்பாலானோர் 18 முதல் 30 வயதுக்குள் உள்ள இளைஞர்களாகும் என்பது மிகுந்த கவலையளிக்கும் விடயமாகும்.

செய்தித் தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் அடிக்கடி வெளிவரும் தகவல்கள் ஒன்றைத் தெளிவாக உணர்த்துகின்றன.இளமையின் ஆற்றலும் ஆர்வமும் இப்போது தவறான திசையில் செல்கின்றது. போதையை பிரபலத்தன்மையின் அடையாளம் என தவறாக நினைக்கும் இளைஞர்கள் தங்களது எதிர்காலத்தை தாமே நாசம் செய்து கொள்கின்றனர். சிலர் மனஅழுத்தத்திலிருந்து தப்பிக்க இதை ஒரு தற்காலிக நிவாரணம் என கருதுகின்றனர்.ஆனால் அவர்கள் அறியாதது அது வாழ்நாள் முழுவதும் அழிவை மட்டுமே தரும் என்பதையாகும். செய்திகள் கூறும் ஒவ்வொரு சம்பவமும் சமூகம் விழிக்க வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டுகிறது. ஒரு போதைப் பொருள் பிடிப்பின் பின்னால் ஒரு குடும்பத்தின் அழிவும் ஒரு இளைஞனின் கனவின் முடிவும்

தொடர்ச்சி ▼

# இளமையின் இனிய பாதை; போதைக்கு அல்ல...!

தொடர்ச்சி▲

மறைந்து கிடக்கின்றன. இது ஒரு நபரின் பிரச்சினையாக அல்ல. சமூகத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கையைச் சிதைக்கும் நெருக்கடியான நிலைமை ஆகும். இத்தகைய செய்திகளை வாசிக்கும் ஒவ்வொருவரும் தமது மனதில் ஒரு கேள்வி எழுப்ப வேண்டும். என் சுற்றத்திலுள்ள இளைஞர்கள் இதே பாதையில் செல்லாமல் இருக்க என்ன செய்யலாம்?அந்த கேள்விக்கான பதிலே சமூகத்தின் விழிப்புணர்வாக மாறும்.

ஒரு இளைஞன் போதைப்பொருளை அடையும் வழிகள் பலவாக இருக்கின்றன. நண்பர்கள் அழைப்பு, சமூக ஊடகங்கள், இரவு நேர களியாட்டங்கள், ஆன் லைன் விற்பனைகள் எனப் பல வாசல்கள் திறக்கப் பட்டுள்ளன. முதலில் மன அழுத்தத்தை குறைக்கும் மருந்து என்று தொடங்குவது பின்னர் அடிமைபடுத்தும் தன்மையை உருவாக்குகிறது. அந்த அடிமைத்தனத்தில் இருந்து மீள முயற்சிக்கும் போது அவன் கல்வி வேலை குடும்ப உறவுகள் அனைத்தையும் இழந்து விடுகின்றான்.

போதையால் பாதிக்கப்பட்ட இளைஞன் தனிப்பட்ட முறையில் மட்டுமல்ல சமூகத்தையும் பாதிக்கிறான். பணக்குற்றங்கள், திருட்டு, வன்முறை, குடும்ப சொத்துக்கள் அழிவு என இவை அனைத்தும் போதைப்பொருளின் பின்விளைவுகளாகும். மனநலம் பாதிப்படைந்த இளைஞர்கள் சமூகத்தில் நம்பிக்கையற்றவர்களாக மாறுகின்றனர். இதனால் சமூக ஒழுங்கும் எதிர்கால தலைமுறையின் நம்பிக்கையும் சிதைந்து விடுகின்றன.

போதைகள் மனிதனை மயக்கி சிந்திக்கும் திறனை அழிக்கின்றன. முதலில் ஒரு சிறு முயற்சி என்ற எண்ணத்துடன் தொடங்கினாலும் அது பின்னர் ஒரு பழக்கமாகி வாழ்க்கையையே கட்டுக்குள் வைக்க முடியாத நிலையை உருவாக்குகிறது. போதைப் பொருள்கள் உடலையும் மனதையும் அழித்து மனிதனை தன்னம்பிக்கை இழந்தவராக மாற்றுகின்றன. ஒருவரின் கனவுகள் குறிக்கோள்கள் திறமைகள் அனைத்தும் அந்த மயக்கத்தின் அடியில் புதைந்துவிடுகின்றன.

இன்றைய இளைஞர்கள்தான் நாளைய தலைவர்கள். அவர்கள்தான் நாட்டின் எதிர்காலம். இளமையின் ஆற்றல் அறிவுடன் இணைந்தால் ஒரு தேசம் உயர்வடையும் ஆனால் அது போதையுடன் இணைந்தால் அந்த தேசம் வீழ்ச்சியடையும்.

எனவே இளைஞர்கள் தங்கள் ஆற்றலை நன்மை நிறைந்த துறைகளில் பயன்படுத்த வேண்டும். கல்வி, விளையாட்டு, கலை, தொழில்நுட்பம் போன்ற துறைகள் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சரியான மேடையாகும்.இன்றைய சமூகத்தில் நண்பர்களின் அழைப்பில் அல்லது ஆர்வத்தால் போதைப்பொருள் வழிக்கு இழுக்கப்படும் இளைஞர்கள் பலர் காணப் படுகின்றனர். ஆனால் உண்மையில் அந்த வழி இனிய பாதை அல்ல. அது ஒரு அழிவு பாதை. போதைப்பொருள் ஒருவரின் சுயநினைவையும் நெறிமுறையையும் பறித்துக் கொள்கிறது. அதனால் தான் இளமையின் இனிய பாதை போதைக்கு அல்ல என்ற உண்மை இன்று மிக முக்கியமானதாக மாறியுள்ளது.

இது வெறும் ஒரு சமூக பிரச்சினை மட்டுமல்ல இது ஒரு மனிதாபிமான பிரச்சினை. ஒவ்வொரு குடும்பமும் பள்ளியும் சமூக அமைப்பும் இளைஞர்களுக்கு வழி காட்டும் பொறுப்பு உடையவை. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அன்பும் கவனமும் காட்டி தவறான நட்புகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஆற்றலை நல்ல நோக்கில்



செலுத்த வேண்டும்.

அரசும் இதற்கான கடமையில் இருந்து விலக முடியாது. போதைப் பொருள் வியாபாரிகளுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில் போதையில் இருந்து மீண்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை, மனநல ஆலோசனை, மறுவாழ்வு மையங்கள் போன்றவையும் வலுப்படுத்தப்பட வேண்டும். இளமையின் இனிய பாதை என்பது சிரமமற்றது அல்ல. ஆனால் அது நம்பிக்கையுடன் நிறைந்தது. அது சாதனைகள் நிறைந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இளமையை அழிக்கும் மயக்கப் பாதையைத் தவிர்த்து அறிவும் ஒழுக்கமும் நிறைந்த வழியைத் தேர்ந்தெடுப்பது ஒவ்வொரு இளைஞனின் கடமையாகும்.

போதைக்கு எதிரான சட்டங்கள் இருப்பினும் அவை பலமுறை செயல்படுத்தலில் தளர்வு காண்கின்றன. அரசாங்கம் கடுமையான தண்டனைகளை வழங்குவதோடு மறுவாழ்வு மையங்கள் மூலம் போதையில் இருந்து மீள முயற்சிக்கும் இளைஞர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டுதல் வழங்க வேண்டும். வாழ்க்கையின் ஒளியை மங்கவைக்கும் போதைப் பொருள்களை நிராகரிப்போம். நம் மனமும் உடலும் சுதந்திரமாக இருக்கும் போதே நம் சிந்தனைகள் செழித்து வளர முடியும். போதைக்கு அல்ல என்ற ஒரே சொல்லை நம் வாழ்க்கையின் மந்திரமாக மாற்றுவோம். அதுவே நமக்கும் நம் தேசத்திற்கும் உண்மையான முன்னேற்றத்தின் பாதையாகும்.

இன்றைய இளைய தலைமுறையினர் தேசத்தின் நாளைய தலைவர்களாகும். அவர்களின் கைகளில் நம் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது. ஆனால் போதைப் பொருள் எனும் மாயவலை அவர்களின் கனவுகளை களவாடி வாழ்க்கையின் ஒளியைக் கெடுத்து விடுகிறது. இதனை தடுப்பது ஒரு தனிநபரின் கடமையல்ல சமூகத்தின் ஒட்டுமொத்த பொறுப்பாகும். அரசு, கல்வி நிறுவனங்கள், பெற்றோர்கள், மற்றும் ஊடகங்கள் ஆகியவை ஒருமித்த முயற்சியுடன் இளையோரை விழிப்புணர்வூட்ட வேண்டும். போதையில் இருந்து விலகி அறிவிலும் நற்குணத்திலும் மேம்பட்டு வாழும் இளைய தலைமுறைதான் உண்மையான தேசிய செல்வம். எனவே இளமையின் இனிய பாதை போதைக்கு அல்ல போற்றத்தக்க சாதனைகளுக்கே என்பதை ஒவ்வொரு இளைஞனும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் இணைந்து போதையற்ற புத்திசாலித் தனமான ஒளிமிகுந்த இலங்கை சமூகத்தை உருவாக்குவோம்.



# அணு ஆயுதங்களின் நிழலில் உலக அரசியல்!

சமீப காலங்களாக சர்வதேச அரசியலில் நடைபெறும் நிகழ்வுகளும் சர்வதேச மோதல்களும் உலகளவில் பேசுபொருளாகி வருகின்றது. சர்வதேச அரசியலில் ராஜதந்திரமும் அணு ஆயுத பலமுமே ஒவ்வொரு நாட்டினுடைய நிலைத்த தன்மைக்கு காரணமாகியுள்ளது. அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட அணு ஆயுதங்கள் (Nuclear Weapons) மனிதகுல வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தின. ஒருபுறம் இவை ஒவ்வொரு நாட்டுக்கும் உலகப் போரைத் தடுக்கும் ஒரு வலிமையான கவசமாகச் செயல்பட்டன. மறுபுறம் ஒரு நொடி தவறு ஒட்டுமொத்த உலகையும் அழித்துவிடும் என்ற நீங்கா அச்சத்தை விதைத்தன.

உக்ரைன் – ரஸ்யா போர் தற்போது சமாதானத்தில் முடிந்துள்ள இஸ்ரேல் – காசா போர் மேற்காசியப் பதற்றங்கள் மற்றும் வட கொரியாவின் தொடர்ச்சியான ஏவுகணைச் சோதனைகள் போன்ற தற்போதைய சர்வதேசச் சூழலில், அணு ஆயுதங்களின் பயன்பாடு பற்றிய விவாதங்களும் அதன் விளைவாக எழும் சர்வதேச அரசியல் நகர்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

அணுசக்திக் கோட்பாட்டின் அச்சாணியாக தடுப்புக் கொள்கை (Deterrence) காணப்படுகின்றது. அதாவது அணு ஆயுதங்களின் பலத்தின் மூலம் சர்வதேச உறவுகளைக் கட்டமைக்கும் அடிப்படைக் கொள்கையே ‘தடுப்புக் கொள்கை’ (Deterrence) ஆகும். அணு ஆயுதம் ஏந்திய ஒரு நாடு, எதிரி நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் பதிலுக்குத் தானும் முழுமையாக அழிக்கப்படுவது நிச்சயம் என்பதால் எந்த நாடும் அணு ஆயுதத்தின் மூலம் தனது முதல் தாக்குதலைத் தொடங்கத் துணியாது. ஏனெனில் ஒரு நாடு அணு ஆயுதத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்துமேயானால் பதிலுக்கு மற்றைய நாட்டுக்கு அணுஆயுதத்தைப் பயன்படுத்தும் உரிமை உள்ளது என்பதே சர்வதேச அணுசக்திக் கோட்பாடாகும்.

இதனால் தான் பனிப்போர் காலத்திலும் அதற்குப் பின்னரும் அணு ஆயுத மூலம் நாடுகளுக்கு இடையே பெரிய அளவிலான நேரடி மோதல்கள் ஏற்படாமல் உலகைப் பாதுகாத்தது எனலாம். ஆனால் ஒரு நாடு தனது அணுசக்திக் கோட்பாட்டில் மாற்றம் செய்தாலோ அல்லது அணு ஆயுதமல்லாத ஒரு மோதலில் தோல்வியைத் தவிர்க்க அணு ஆயுதத்தைப் பயன்படுத்த அச்சுறுத்தினாலோ ஒட்டுமொத்த உலக அமைப்பும் குலைந்துவிடும் அபாயம் உள்ளது.

இவ்வாறான காரணங்களுக்காக அணு ஆயுதப் பரவலைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (NPT), 1970களில் இருந்து உலக அமைதியைப் பாதுகாக்க முயன்று வருகிறது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (NPT) என்பது அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் அணுசக்தியின் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் அணு ஆயுதக் குறைப்பு மற்றும் பொதுவான முழுமையான ஆயுதக் குறைப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். இது 1968 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1970 இல் நடைமுறைக்கு வந்தது. இருப்பினும் காலப்போக்கில் ஏற்பட்ட சர்வதேச அரசியல் நகர்வுகள் இந்த அமைப்புக்குக் கடும் சவாலை அளிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமீப காலங்களில் புதிய அணுசக்தி நாடுகளாக இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அணு ஆயுத வல்லமையைப் பெற்றதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் பதட்டம் அதிகரித்துள்ளது.

இதுமாத்திரமின்றி என்.பி.ரி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத அல்லது அதிலிருந்து விலகிய நாடுகள் அணு ஆயுதத் திட்டங்களை முன்னெடுப்பது உலக நாடுகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக் கியுள்ளது. இந்த நாடுகளின் நகர்வுகள் பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளையும் ஆயுதப் போட்டிக்குத் தூண்டுகின்றன.

மேலும் அமெரிக்கா, ரஷ்யா போன்ற அணுசக்தி நாடுகள் தங்கள் ஆயுதக் கிடங்குகளை நவீனப்

தொடர்ச்சி ▼



# அணு ஆயுதங்களின் நிழலில் உலக அரசியல்!

**தொடர்ச்சி▲**

படுத்துகின்றன. இந்த பலம் பொருந்திய நாடுகள் புதிய மற்றும் அதிவேக ஏவுகணைகள் (Hypersonic Missiles) அறிமுகப்படுத்தப்படுவதால், நேர்மையான தாக்குதலுக்கான நேரம் குறைந்து, மாபெரும் போர் தொடங்கும் அபாயம் அதிகரிக்கிறது.

அணு ஆயுத நாடுகள் ஈடுபடும் பிராந்திய மோதல்களில்இ இந்த ஆயுதங்களின் பலம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதற்குச் சமீபத்திய நிகழ்வுகள் உதாரணமாகும்.

ரஷ்யா–உக்ரைன் மோதல்: ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்இ உக்ரைனில் தலையிடும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராகப் பல முறை அணு ஆயுதப் பிரயோகம் குறித்த அச்சுறுத்தல்களை விடுத்துள்ளார். இந்த அச்சுறுத்தல்கள்இ நேட்டோ (NATO) படைகள் நேரடியாகப் போரில் நுழைவதைத் தடுத்தன. அதாவது, சிறிய மோதலின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த அணு ஆயுத அச்சுறுத்தல்கள் ஒரு வரம்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியா–பாகிஸ்தான்: இரு அணு ஆயுத நாடுகளுக்கு இடையேயான காஷ்மீர் எல்லை மோதல்கள் போன்ற சிறிய மோதல்கள்இ எப்போது வேண்டுமானாலும் தீவிரமடைந்து “அணு ஆயுதப் போர்” (Nuclear War) என்ற நிலைக்குச் செல்லலாம் என்ற நிதர்சனமான உண்மை, உலக நாடுகளைப் பதற்றத்தில் ஆழ்த்துகிறது. ஒரு நாடு தோல்வியின் விளிம்பில் இருக்கும்போதுஇ தன் இறையாண்மையைப் பாதுகாக்க அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தும் என்ற கோட்பாடு (First Use Policy), மோதலை விரைவாக அணுசக்தி பயன்பாட்டு நிலைக்கு உயர்த்தும் வாய்ப்பை அதிகரிக்கிறது.

இவ்வாறான இக்கட்டான நிலையில் உலகம் தள்ளப்பட்டிருக்கும் போது பாதுகாப்பான எதிர்காலத்திற்கான பாதையில் பயணிப்பது மிகவும் அவசியமாகின்றது. அணு ஆயுதப் பயன்பாடு ஒருபோதும் ஒரு நாட்டின் உண்மையான வெற்றியாக இருக்காது. மாறாக, அது ஒட்டுமொத்த மனித குலத்தின் தோல்வியாகவே முடியும். தொழில்நுட்பக் கோளாறுகள், சைபர் தாக்குதல்கள் மூலம் தவறான எச்சரிக்கை வழங்கப்படுதல் அல்லது அரசியல் தலைவர்களின் தவறான கணிப்பு போன்றவற்றால் கூட அணு ஆயுதப் போர் தொடங்கி விடலாம் என்ற அபாயம் காணப் படுகின்றது.

இதனால் சர்வதேச சமூகம் உடனடியாகக் அணு ஆயுத பயன்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாக,

ஆயுதக் கட்டுப்பாடு (Arms Control): அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற பெரிய நாடுகள் புதிய ஆயுதக் பயன்பாடு மற்றும் உருவாக்கத்தையும் பயன்படுத்துவதையும் குறைத்தல்.

தூதரக முயற்சிகள்: வட கொரியாஇ ஈரான் போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அணுசக்திச் சோதனைகளைக் கண்காணித்தல்.

பொறுப்புணர்ச்சி: அணு ஆயுத நாடுகளின் தலைவர்கள், பொறுப்பற்ற அறிக்கைகளையும், அச்சுறுத்தல்களையும் தவிர்ப்பதன் மூலம்இ மோதலைத் தணிக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறான சிலபல செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இயன்றளவு அணுஆயுத ஆபத்தைக் கட்டுப்படுத்தலாம். அணு ஆயுதங்களின் நிழலில் சர்வதேச அரசியல் நகர்வதனைத் தவிர்க்க முடியாதது. ஆனால், இந்த இருண்ட நிழலில் இருந்து விலகி, மனிதகுலம் அமைதியுடன் வாழ வேண்டுமானால் அறிவும் பொறுப்பும் உலகளாவிய ஒத்துழைப்பும் மட்டுமே நமக்கான ஒரே கவசமாக இருக்க முடியும். அடுத்து இன்னொரு நாடு ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நாடுகளாக மாறிவிடக் கூடாது.

**ஜிந்துஜா விஜயகுமார்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப் படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை நடுகை செய்ய இயலுமெனினும் கார்த்திகைமாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற் செயல் மாத்திரமல்ல, அது தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் ஒரு தேசியச் செயற்பாடும் ஆகும்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பூமி விரைந்து சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதிவேகத்துடன் நீண்ட நேரம் நின்று தாக்கும் சூறாவளிகள், காலம் தப்பிக் கொட்டித் தீர்க்கும் அடை மழை, காடுகளில் தீ மூட்டும் கடும் வறட்சி, உயர்ந்து செல்லும் கடல் மட்டம், உயிரினங்களின் பேரழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம்.

இதனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப்பொருத்தமான மாதமாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பைக் கொண்டுள்ளது.

இந்த மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவில் கொள்ளும் நாள் அடங்குகிறது.

மரவழிபாட்டைத் தமது ஆதி வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்து, அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டுமரபைக்கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில், கார்த்திகைமாத மரநடுகை என்பது தமிழ்த்தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும்.

எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன்கூடிய ஒரு தமிழ்த் தேசியச் செயற்பாடாகவும் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.– என்றார்.





# திருகோணமலை சாம்பல்தீவுச் சந்தியில் ரூ. 8.5 மில். செலவில் பயணிகள் ஓய்விடம்

## முதற்கட்ட நடவடிக்கை நேற்று முன்னெடுப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, சாம்பல்தீவுச் சந்தியில் 8.5 மில்லியன் ரூபா செலவில் பயணிகள் ஓய்வுத் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

திருகோணமலை – புல்மோட்டை பிரதான வீதியின் சாம்பல்தீவு சந்தியில், பட்டினமும் சூழலும் பிரதேச சபை மற்றும் கிழக்கு மாகாண உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகாரசபை என்பன இணைந்து பயணிகளுக்கான ஓய்வு தரிப்பிடத்தை நிர்மாணிக்க உள்ளன.

இந்த ஓய்வுத் தரிப்பிடத்தில் கழிப்பறைகள், சிற்றுண்டிச்சாலை, ஓய்வு அறை மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் என்பன அமைக்கப்படவுள்ளன என்றும் அத்துடன் பயணிகள் தமது செல்லிடத் தொலைபேசிகளை மின்னேற்றம் செய்வதற்கான (சார்ஜ் செய்தல்) வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்றும் பிரதேச சபைத்தலைவர் வெ.சுரேஸ்குமார் கூறினார்.

அதன் நிர்மாண வேலைகள் தொடர்பில் நேற்று (30) ஆரம்ப கண்காணிப்பை மேற்கொள்ள பிரதேச சபைத்தலைவர் மற்றும் மாகாண உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் தொழில் நுட்ப அதிகாரிகள் குறித்த பகுதிக்குச் சென்றிருந்தனர்.

மிக விரைவில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அதனைத் தொடர்ந்து இவ்வீதி ஊடாக நிலாவெளி முதல் புல்மோட்டை வரையில் பயணிக்கும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணிகள் மிகுந்த பயனடைவார்கள் என்றும் பிரதேச சபைத் தலைவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டுக்கு முந்திய காலம் தொடக்கம் சென்ற 2024 ஆம் ஆண்டுவரை இந்தப் பகுதியில் இந்திய, இலங்கை இராணுவப் பிரிவுகளின் பாதுகாப்பு தடை முகாங்களும் அதனை அடுத்து கடற்படை,பொலிஸ் பிரிவுகளின் தடை முகாங்களும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.



# நுண்பாக நிதி நிறுவனங்களுக்கு எதிராக அவசர தீர்மானம் வலி கிழக்கில் நிறைவேற்றம்

நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகளையும் அடாத்தான வட்டிக்கு நிதி வழங்குபவர்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒக்டோபர் மாத அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதில் அவசர நடவடிக்கைக்கான பிரேரணையாக சபையின் உறுப்பினர் ஜங்கரன் இராமநாதனால் மேற்படி பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கடந்த சபையில் நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட கிராமங்கள் தோறும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் மூலம் நிதி நிறுவனங்கள் சட்டம் ஒழுங்கு அந்த நிறுவனங்கள் வரையரைக்குப் புறம்பாக செயற்படுவது நீண்ட முயற்சியால் மட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

தற்போதைய நிலையில் மீளவும் கிராமங்கள் தோறும் நுண்நிதிக்கடன் வழங்குனர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்கு வைத்து வீடு வீடாகச் சென்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறாக ஈடுபடுவதன் வாயிலாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாட்டின் நடைமுறையில் உள்ள நிதி சார் சட்டம் ஒழுங்குகளின் வாயிலான கடப்பாடுகளை பூர்த்திசெய்யாது அவற்றை அந்த நிறுவனங்கள் மீறிவிடுகின்றனர். இதனால் பெரும் இன்னல்களுக்குள் கிராமப்புறப் பெண்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

பிரதேச சபை நடைமுறையில் செயற்படும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்குள் கண்காணிக்க வேண்டும். அவற்றின் அத்துமீறல்கள் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என சபை உறுப்பினரின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேலும் மீற்றர் வட்டியாளர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளை, கடந்த சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் உறுப்பினர் ஜங்கரன் இராமநாதனால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இவ்விடயத்தில் உடனடி இடர் நிலையாகக் கருத்தில் கொண்டு பிரதேச சபை உச்ச அளவில் செயற்படாவிடில் அப்பாவிகளை பாதுகாக்க முடியாது போகும் என்பதுடன் அநியாயமாக பலர் தவறானமுடிவுகளைக்கூட எடுக்கும் நிலை ஏற்படும் எனவும் உடனடியாக இந்தத் தீர்மானத்தை முன்கொண்டு செல்லத்தக்க செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் உறுப்பினர் ஜங்கரன் இராமநாதனால் கோரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது உப தவிசாளர் ஜனார்த்தனன் உரையாற்றுகையில், மக்கள் தெளிவின்றி ஆடம்பரத் தேவைகளுக்காக முறைகேடான கடன்களைப் பெற்று பாரிய இடருக்கள் அகப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளுக்காக சகல தரப்புக்களும் ஒன்றிணைய வேண்டும்.– என்றார்.

இந்த நிலையில் இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நிலையில், விரைவான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

# பெக்கோ சமனின் மனைவி இன்று பிணையில் விடுவிப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர் “பெக்கோ சமன்” என்பவரின் மனைவி ஷானிகா லக்ஷானியை பிணையில் விடுவிக்கக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம, இன்று வெள்ளிக்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 54 (1) இன் கீழ் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கப் போதுமான ஆதாரங்களை அரச தரப்பு சமர்ப்பிக்காததால், சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது “கெஹெல்பத்தர பத்மே”, “கொமாண்டோ சலிந்த”, “பாணந்துறை நிலங்க”, “பெக்கோ சமன்” மற்றும் பெக்கோ சமனின் மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

இந்தப் பாதாள உலகக் கும்பலில் இருந்த “பெக்கோ சமன்” என்பவரின் மனைவி ஓகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாணத்தில் மருத்துவ சேவைகள் ஐந்து மாவட்டங்களுக்கும் சமமாக வேண்டும்

## கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் ந.சச்சிதானந்தன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் மருத்துவசேவை ஒரே இடத்தில் குவிக்கப்படாமல் ஐந்து மாவட்டங்களுக்கும் சமமாக பகிரப்படல் வேண்டும் என்று கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை புலம்பெயர் உறவுகள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உதவித் திட்டங்களை கோடிக் கணக்கில் வழங்கி வருகின்றனர்.

ஆனால், மாகாணத்தில் ஏனைய 4 மாவட்டங்களிலும் உள்ள வைத்திய சாலைகள் பெரிதளவில் அபிவிருத்தி இன்றிக் காணப்படுகின்றன.

அபிவிருத்தி ஒரே வைத்தியசாலையை நோக்கி குவிக்கப்படுவதால் ஏனைய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்கள் மாவட்டம் கடந்து பல இடர்களைச் சந்தித்து யாழ். நோக்கி வரவேண்டியுள்ளனர்.

அத்துடன் திறமையான வைத்தியர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற வேண்டியுள்ளது.

இதனால் ஒரு பக்கம் நோயாளர்களின் நேரம், பணம் ஆகியன விரயமாவதுடன் மறுபக்கம் பெருமளவான வைத்தியர்களும் யாழ். நகர் நோக்கி குடும்பமாக வந்து தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இதனால் யாழ்ப்பாணத்தில் இட நெருக்கடி, போக்குவரத்து நெருக்கடி, சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஒரே மாவட்டத்தைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்து கொண்டு செல்வது முற்போக்கான திட்டம் அல்ல. அபிவிருத்தி



அடையாத மாவட்டங்களையும் அபிவிருத்தி அடைந்த மாவட்டங்களுக்கு சமாந்தரமாக கொண்டு வர வேண்டும் அதுவே முற்போக்கான சிந்தனை. அந்த மாவட்ட மக்களுக்கும் மருத்துவ சேவை அருகாமையில் கிடைக்க வேண்டும். இதனால் பாரிய சிரமங்களை நிவர்த்தி செய்ய முடியும்.

எனவே அரச மற்றும் புலம்பெயர் உறவுகள் எதிர்காலத்தில் மருத்துவ உதவிகளை வழங்கும் போது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.- என்றார்.







# “அடுத்த தலைமுறைத் தலைவர்கள்” கிழக்கு மாகாணத்தில் ஆரம்ப நிகழ்வு!

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனாதிபதி செயலகத்தின் கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ், நாட்டின் அனைத்து அரசுப் பள்ளிகளையும் மைய மாகக் கொண்டு செயல்படுத்தப்படும் “அடுத்த தலை முறைத் தலைவர்கள்” திட்டத்தின் கிழக்கு மாகாண ஆரம்ப நிகழ்வு, மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவின் தலைமையில், திருகோ ணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரியில் நேற்று (30) நடைபெற் றது.

கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தின் மூன்று முக்கிய தூண்களில் ஒன்றாகக் கருதப்ப டும், நெறிமுறைகள் துறையின் மூலம் சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடன் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பாடசாலை மாணவர்களின் மென் திறன்களை வளர்ப்பது, அந்த குழந்தை களின் தலைமைத்துவ திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை ஒரே நேரத்தில்



வளர்ப்பது, குழந்தைகளில் சுய நெறி முறை முறையை ஏற்படுத்துவது, பாட சாலை மற்றும் அவர்களின் தாய்நாடு குறித்து குழந்தைகளில் நேர்மறையான அணுகுமுறைகளை வளர்ப்பது, பெற்றோ ரின் பங்கை வளர்ப்பது மற்றும் குழந் தைகளின் வளர்ச்சிக்கான விழிப்புணர்வை அதிகரிப்பது போன்ற நோக்கங்களுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

திருகோணமலை, கிண்ணியா மற்றும் மூதூர் ஆகிய மூன்று கல்வி வலயங்களில் உள்ள பத்து பாடசாலைகளைச் சேர்ந்த நூறு மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தமிழ் மொழிமூல மாணவர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் தமிழ் மொழி மூலத்தில் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களும், சிங்கள மொழிமூலத்தில் இரண்டு நிகழ்ச் சித் திட்டங்களும் செயல்படுத்தப்பட் டுள்ளன.

இவ்வாறு பயிற்சி பெற்ற மாணவர்கள் மூலம் முழுப் பாடசாலை முறையிலும் மாணவர்களுக்குக்கும் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் க.நிமல்ரஞ்சன், திருகோண மலை, கந்தளாய் மற்றும் மூதூர் வலயக் கல்வி அலுவலகங்களின் கல்விப் பணிப் பாளர்கள், திருகோணமலை ஸ்ரீகோ ணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






# 22 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது நுவரெலியா பிரதேச சபையின் ‘பட்ஜெட்’

(ஆர்.எப்.எம்.சுஹைல் )

நுவரெலியா பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு – செலவுத் திட்ட நடவடிக்கை நிறைவேற்று வதற்கு இன்று நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த வரவு – செலவுத் திட்ட அறிவிப்பு கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 5 உறுப்பினர்களில் ஒருவர் சுகயீனம் காரணமாக சமூகமளிக்க வில்லை.

தேசிய மக்கள் சக்தி 7 உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி 5 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி 1 உறுப்பினர், பொதுஜன பெரமுன 1 உறுப்பினர், சுயா தீனமாக 2 உறுப்பினர்கள், அண்ணா மலையக மக்கள் முன்னணி 1 உறுப்பினர், மக்கள் போராட்ட முன்னணி 1 உறுப்பினர் என மொத்தமாக அவை தலைவரோடு 23 உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தின் ஆதரவாக அவை தலைவர் உட்பட 22 உறுப்பினர்களும் எதிராக ஒரு உறுப்பின ரும் ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர். ஒரு உறுப்பினர் சமூகமளிக்கவில்லை.

அத்தோடு 22 ஆதரவு வாக்குகளால் நுவரெலியா பிரதேச சபையில் வரவு – செலவுத் திட்டம் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.





# தமிழர்களுக்கும், பிஹார் மக்களுக்கும் பகையை உண்டாக்கும் அற்ப அரசியல்

## மோடிக்கு ஸ்டாலின் கண்டனம்

தமிழர்களுக்கும், பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்ளும் அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு நாட்டின் நலன் மீது பிரதமர் கவனம் செலுத்த வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இது போன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா – பிஹார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.கவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று பிஹாரில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, “தி.மு.க ஆளும் தமிழ்நாட்டில் தி.மு.கவினர் பிஹாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர்.” என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.



# தி.மு.கவின் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அ.தி.மு.க. - பா.ஜ.கவுக்கு அழைப்பில்லை

எஸ்.ஐ.ஆர். திருத்தத்தை எதிர்த்து நடத்தப்படவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க (அன்புமணி தரப்பு) தவிர 60 கட்சிகளுக்கு தி.மு.க. சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

தமிழகம் உட்பட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த 27 ஆம் திகதி வெளியிட்டு, பணிகளைத் தொடங்கியது. இந்த சிறப்பு வாக்காளர் குறித்த திருத்தத்துக்கு தி.மு.க, காங்கிரஸ், தே.மு.தி.க, நாம் தமிழர் உள்ளிட்ட 10 கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தி.மு.க. கூட்டணி கட்சிகள் கடந்த 27 ஆம் திகதி சென்னையில் ஆலோசனை நடத்தின. இதில், எஸ்.ஐ.ஆர். தொடர்பாக சென்னையில் நவம்பர் 2 ஆம் திகதி அனைத்துக் கட்சி கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து, இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளை, தி.மு.க. நிர்வாகிகள் குழு நேரில் சந்தித்து அழைப்பு விடுத்து வருகின்றது.

அந்தவகையில், த.வெ.க, நாம் தமிழர், தே.மு.தி.க, த.மா.கா. உட்பட பல வேறு அரசியல் கட்சிகளுக்கும் நேற்று முன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டது. த.வெ.க. பொதுச் செயலாளர் என். ஆனந்தை, தி.மு.க. சார்பில் பூச்சி முருகன் நேரில் சந்தித்து, கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார். தொடர்ந்து, பா.ம.க, அ.ம.மு.க. உள்ளிட்ட கட்சிகளுக்கும் நேற்று அழைப்புக் கொடுக்கப்பட்டது.

அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க (அன்புமணி தரப்பு) தவிர்த்து 60 கட்சிகளுக்கு தி.மு.க. சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளின் கருத்துகளை கேட்டு, அடுத்தகட்ட முடிவுகள் எடுக்கப்படும். எஸ்.ஐ.ஆர். திருத்தத்தை ஆதரிப்பதால் அ.தி.மு.க, பா.ஜ.கவுக்கு அழைப்பு விடுக்கவில்லை என தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# மோந்தா புயலால் 5,265 கோடி ரூபா இழப்பு: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தகவல்



மோந்தா புயலால் ஆந்திர மாநிலத்தில் 5,265 கோடி இந்திய ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், நரசாபுரம் அருகே செவ்வாய்க்கிழமை நள்ளிரவு மோந்தா புயல் கரையை கடந்தது. இதன் தாக்கத்தால் ஆந்திராவில் பல மாவட்டங்களில் அதிகமான பயிர்கள் நாசமடைந்தன. நூற்றுக்கணக்கில் கால்நடைகள் இறந்தன. இன்னமும் பிரகாசம், ஓங்கோல், கோனசீமா, விசாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மக்கள் வெள்ள பாதிப்பால் தவித்து வருகின்றனர். பலர் வீடுகளை இழந்து வாடுகின்றனர்.

ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண், கிருஷ்ணா மாவட்டம், ஆவினிகட்டா தொகுதியில் உள்ள கோடூரு கிராமத்தில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று ஆய்வு செய்தார். இந்நிலையில், அமராவதியில் உயர் மட்ட அதிகாரிகளுடன் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மோந்தா புயல் கரையை கடந்துவிட்டது. எனினும், கட்டிடம் மற்றும் சாலை மேம்பாட்டு துறை சார்பில் 2,079 கோடி இந்திய ரூபா, வேளாண் துறை சார்பில் 829 கோடி இந்திய ரூபா, தோட்டக்கலை துறை சார்பில் 39 கோடி இந்திய ரூபா, பட்டு நூல் துறை சார்பில் 65 கோடி இந்திய ரூபா என மொத்தம் 5,265 கோடி இந்திய ரூபா அளவுக்கு உள்கட்டமைப்புகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது." - என்றார்.



# ரஷ்ய எல்லை அருகே உக்ரைன் கிராமத்தில் துன்புறுத்தப்பட்டு புதைக்கப்பட்ட 448 பேர்

ரஷ்ய எல்லைக்கு அருகே, கிழக்கு உக்ரைனில் கிராமம் ஒன்றில் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டு புதைக்கப்பட்ட 448 அப்பாவி உக்ரைனிய மக்கள் தொடர்பில் அதிர்ச்சி பின்னணி வெளியாகியுள்ளது.

கடந்த 2022 ஒக்டோபர் மாதம் நடந்த இந்த கொடுஞ்செயல் தொடர்பில் உக்ரைன் கர்னல் செர்ஹி போல்வினோவ் மற்றும் அவரது போலிஸ் நடத்திய விசாரணையில் அதிரவைக்கும் பின்னணி வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கிழக்கு உக்ரைனில் Izium நகருக்கு வெளியே பைன் மரக் காட்டில் இந்த சடலங்கள் அனைத்தும் புதைக்கப்பட்டிருந்தது. கர்னல் செர்ஹி போல்வினோவ் அப்பகுதிக்கு விசாரணைக்கு என செல்லும் போது, அப்பகுதியில் எழுந்த மணம் அவரால் மறக்க முடியாது என்றே குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் படை முன்னேறியதும் அங்கிருந்த ரஷ்ய இராணுவம், அப்பகுதி அப்பாவி மக்களை மொத்தமாக கொன்றுவிட்டு தப்பியுள்ளது. சடலங்கள் அனைத்தும் கைகால்கள் உடைந்த நிலையிலும், கைகள் கட்டப்பட்டும், தீக்காயங்களுடனும், கத்தி மற்றும் துப்பாக்கியால் காயப்படுத்தப்பட்டும், கழுத்தில் கயிறுகளுடனும், உடல் சிதைக்கப்பட்டும் கண்டெடுக்கப்பட்டன. பெண்கள், சிறார்கள் என மொத்தம் 448 உடல்கள் அழுகிய நிலையில், அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளது.

உடல்கள் கொடூரமாக சிதைக்கப்பட்டிருந்ததால், அவர்களை அடையாளம் காணும் பணி சிக்கலாக இருந்துள்ளது. இருப்பினும், இதுவரை 405 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

22 பேர்களின் சடலங்கள் இன்னும் டி.என்.ஏ. சோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது, இன்னொரு 21 பேரின் அடையாளங்கள் ஏமாற்றமளிக்கும் வகையில் சிக்கலாக உள்ளது.

1990களில் யூகோஸ்லாவியா உடைந்ததிலிருந்து ஐரோப்பா கண்ட மிகப்பெரிய ஒற்றை போர்க்குற்ற சம்பவம் இதுவென்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கர்னல் செர்ஹி போல்வினோவ் என்பவரின் 1,000 பேர்கள் கொண்ட வலுவான அணி கடந்த 3 ஆண்டுகளாக இந்த வழக்கில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தது 71 பேர் ரஷ்யப் படைகளால் இயக்கப்படும் பீரங்கிகள், ஏவுகணைகள் அல்லது மோட்டார்களால் கொல்லப்பட்டுள்ளனர். இன்னொரு 41 பேர்கள் ரஷ்ய விமானத் தாக்குதலின் விளைவாக கொல்லப்பட்டுள்ளனர். இந்த 448 பேர்களில் மூன்று வயது நிகிதாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்ரூவின் அனைத்துப் பட்டங்களையும் நீக்கி இல்லத்திலிருந்து வெளியேற்றினார் சார்ளஸ்

பிரித்தானிய மன்னர் சார்ளஸ், அன்ரூவிடமிருந்து இளவரசர் என்ற பட்டத்தை நீக்கி விண்ட்சரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

65 வயதான அன்ரூ, மறைந்த ராணி எலிசபெத்தின் இரண்டாவது மகனும், மன்னர் சார்ளஸின் சகோதரரும் ஆவார்.

அவர், குற்றம் சாட்டப்பட்ட பாலியல் குற்றவாளியான ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்பு கொண்டிருந்ததால் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

இந்தநிலையில் இளவரசர் அன்ரூ, தான் வகித்து வந்த 'யோர்க் கோமகன்'



(Duke of York) உள்ளிட்ட தனது அனைத்துப் பட்டங்களையும் இம்மாதம் துறப்பதாக அறிவித்தார்.

தற்போது மன்னர் சார்ளஸ் தனது நடவடிக்கையை மேலும் கடுமையாக்கி, அன்றூருவின் அனைத்து பட்டங்களையும் நீக்கி விட்டார்.

புற்றுநோய் சிகிச்சையை தொடர்ந்து பெற்று வரும் மன்னரின் இந்த முடிவு, சமகால பிரித்தானிய அரச குடும்ப வரலாற்றில் மிகக் கடுமையான நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 31/10/2025

போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் கனடாவில் அதிகரிப்பு C2





# கனடாவில் அதிகரிக்கும் துப்பாக்கிச்சூட்டு கலாசாரம்

கனடாவில் உள்ள பஞ்சாபி பாடகர் சானி நாட்டனின் வீட்டின் மீது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கனடாவில், சமீப காலமாகவே சீக்கியர் மற்றும் இந்திய வம்சாவளியினர் மீதான வன்முறை அதிகரித்து வருகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில், பொலிவுட் நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவின் உணவகத்தில், நான்கு மாதத்தில் மூன்று முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சீக்கிய தொழிலதிபர் ஒருவர் நேற்றுமுன் தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.


அடுத்தடுத்த வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையில், பஞ்சாபி பாடகர் சானி நாட்டனின் வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை என கனேடிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் உட்பட பல கொலை சம்பவங்களுக்கு கனடா உட்பட பல நாடுகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் பிரபல குற்றக் குழு தலைவர் லோரன்ஸ் பிஷ்னோய் பொறுப்பேற்றுள்ளார்.



# போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் கனடாவில் அதிகரிப்பு






கனடாவில் போதைப்பொருள் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

12 ஆண்டுகளில் முதன்முறையாக இவ்வாறு போதைப் பொருள் குற்றச் செயல்கள் உயர்ந்துள்ளதாக கனேடிய புள்ளிவிபரவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த அளவு 2011 ஆம் ஆண்டில் பதிவான போதைப் பொருள் குற்றச் செயல்களை விடவும் 61 சத வீதம் குறைவாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா, கொக்கெய்ன் மற்றும் ஹெரோயின் தவிர்ந்த பிற ஓப்பியாய்டு வகை போதைப்பொருள்களுடன் தொடர்புடைய கைப்பற்றல் மற்றும் கடத்தல் வழக்குகள் அதிகரித்துள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 2024 ஆம் ஆண்டில் 100,000 பேருக்கு 128 வழக்குகள் என்ற அளவில் பதிவான போதைப் பொருள் குற்ற விகிதம், 2011 ஆம் ஆண்டில் பதிவான 330 வழக்கு களிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தே உள்ளது.

2018ஆம் ஆண்டில் கஞ்சா சட்ட பூர்வமாக்கப்பட்டதிலிருந்து, போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பான பதிவுகளில் கணிசமான மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கனேடிய புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.




# இந்தியர்கள் மீதான வன்முறை அதிகரிப்பு

கனடாவில், சமீப காலமாகவே சீக்கியர் மற்றும் இந்திய வம்சாவளியினர் மீதான வன்முறை அதிகரித்து வருவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரே யில், பொலிவுட் நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவின் உணவகத்தில், நான்கு மாதத்தில் மூன்று முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை சீக்கிய தொழிலதி பர் ஒருவர் அண்மையில் சுட்டுக் கொல லப்பட்டார். அடுத்தடுத்த வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையில், பஞ்சாபி பாடகர் சானி நாட்டனின் வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. எனி னும் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் உட்பட பல கொலை சம்பவங்களுக்கு, கனடா உட்பட பல நாடுகளில் குற்றச்செயல் களில் ஈடுபட்டு வரும் பிரபல குற்றக் குழு தலைவர் லோரன்ஸ் பிஷ்னோய் பொறுப்பேற்றுள்ளார்.










# தென்கொரிய கப்பல் தொழில்சாலைக்கு விஜயம் செய்தார் கனடா பிரதமர் கார்னி

கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தென் கொரியாவில் நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கும் உற்பத்திசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

கனடாவின் அடுத்த தலைமுறை நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளும் போட்டியில் உள்ள நிறுவனங்களில் ஒன்றான தென் கொரியாவின் ஹன்வா ஓஷன் நிறுவனம் தயாரித்த கப்பல்களைப் பார்வயிடும் நோக்கில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தென்கொரியா விஜயம் செய்துள்ள பிரதமர் அங்கு பாதுகாப்பு கூட்டணி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கார்னியுடன் பாதுகாப்புத் துறை அமைச்சர் டேவிட் மெக்ஜின்டி, வைஸ் அட்மிரல் ஆங்கஸ் டாப்ஷி மற்றும் தென் கொரியா பிரதமர் கிம் மின்-சொக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொண்ட நவீன உற்பத்தி நிலையத்தையும் கார்னிக்கு காட்டியது. கனடா, தனது பழமையான விக்டோரியா வகை நீர்மூழ்கிக் கப்பல்களை மாற்றுவதற்காக 12 புதிய கப்பல்கள் கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளது.

இது ஆர்க்டிக் பகுதியில் இராணுவ பங்கேற்பை வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாகும்.







# ஒன்டாரியோ மாகாணத்திற்கு கிடைக்கப்பெறும் அதிஸ்டம்

ஒன்டாரியோ மாகாணத்தில் இந்த ஆண்டு நடைபெற்ற லொத்தர் சீட்டிழுப்புக்களில் ஆறு தடவைகள் ஜாக்பாட் பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் லொத்தர் சீட்டின் மூலம் மேலும் ஒருவருக்கு 40 மில்லியன் கனேடிய டாலர் பெறுமதியான லாட்டோ மேக்ஸ் ஜாக்பாட் பரிசு கிடைத்துள்ளது.

இந்த வெற்றி சீட்டு கிரே கவுண்டி எனப்படும் பகுதியில் விற்கப்பட்டுள்ளது.

இப்பகுதி ஓவென் சவுண்ட், மீஃபோர்ட், ப்ளூ மவுண்டன், பிளெஷர்டன், டர்ஹாம், ஹானோவர் போன்ற நகரங்களை உள்ளடக்கியது.

இந்த சீட்டிலுப்பில் பங்குபற்றிய அனைவரும் தங்களது சீட்டுகளை செயலி அல்லது லொட்டரி விற்பனை நிலையங்களில் சரிபார்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறிய பரிசுகளுக்குக் கூட தாங்கள் தகுதியுடையவர்களா என்பதை உறுதி செய்யுமாறு கூறியுள்ளது. 2025ஆம் ஆண்டில் இதுவரை ஒன்டாரியோவில் ஆறு முறை லாட்டோ மேக்ஸ் ஜாக்பாட் வெற்றிகள் பதிவாகியுள்ளன.